Tamilmanam International Research Journal of Tamil Studies
e-ISSN 3049-0723 · p-ISSN 3107-7781
Department of Library Nallamuthu Gounder Mahalingam College · tamilmanam.in

திறந்த அணுகல்
தொகுதி 07, எண் 02 February (2026)

ARTICLES

# சமூகப்பார்வையில் மாதவிக்குட்டி நாவல்கள்

Madhavikkutti's Novels from a Social Perspective

**Riya Raja k**[1,*]

[1] Govt Girls HSS, karamana, Trivandrum

* **தொடர்பு ஆசிரியர்:** Riya Raja k, riyaraja.kr32@gmail.com

**கட்டுரைத் தகவல்**

**கட்டுரை வரலாறு**
பெறப்பட்டது: 1 பிப்ரவரி 2026
திருத்தப்பட்டது: 5 பிப்ரவரி 2026
ஏற்கப்பட்டது: 6 பிப்ரவரி 2026

**கட்டுரை எண்**
MS-2026-0009

**சக மதிப்பாய்வு**
Double-blind peer review

**ஆய்வுச் சுருக்கம்**

“சமுதாயத்தின் விளைபொருளே இலக்கியம். இலக்கியம் சமுதாயத்தையும் சமுதாயம் இலக்கியத்தையும் ஒன்றையொன்று சார்ந்தே வளர்ந்து வந்துள்ளன. சமுதாயத்தைச் சார்ந்தப் படைப்பாளி, தான் வாழும் இடத்தைச் சுற்றியே தன்னுடைய எண்ணங்களைப் படர விட்டுக் கொண்டிருப்பான். இதனால் சமுதாய அவலங்கள் எளிதில் அவனது மனதைக் கவ்விக்கொள்கின்றன.”1 ஒவ்வொரு நாவலும் ஏதாவது ஒரு பிரச்சனையையோ அல்லது பல பிரச்சனைகளையோ மையமாகக் கொண்டே புனையப்படுகின்றன. சுருங்கச் சொன்னால் சமுதாயக் கருத்துக்களைக் கூறுவதாகவே இவருடைய நாவல்கள் அமைந்துள்ளது. சமூக சிக்கல்களை மையமாக அமைத்து நாவல்கள் படைத்த மலையாள படைப்பாளிகளுள் இன்றியமையாததோர் இடம்பெறுபவர் மாதவிக்குட்டி அவர்கள். இவருடையப் படைப்புக்கள் மலையாள இலக்கிய உலகிற்கு ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தியது எனக்கூறலாம். சாதாரன மக்களின் வாழ்க்கையின் பிரதிபலிப்பாக அமைந்துள்ளது இவர் படைப்புகள். எழுத்துலகில் ஒரு திருப்புமுனை என்று கூறினால் அது மிகையாகாது, சமூகத்தின் அடிமட்டத்தில் வாழ்கின்ற மக்களின் சிக்கல்கள், சமூக அமைப்பில் நிலவி வருகின்ற முரண்பாடுகள், அதன் விளைவாக அவலங்கள், பொருளாதார அடிப்படையில் ஏற்படுகின்ற அவலங்கள், சமூக மதிப்புக்களின் மாற்றம், குடும்ப அமைப்புகளின் சிதைவு, பெண்கள் நெறி பிறழ்தல், பெண்மையை மதிக்காத போக்கு, செல்வந்தர்களின் சுரண்டல், பெண்ணடிமை, ஆணாதிக்கம், தொழிலாளர்களின் நிலை போன்றவை இவருடைய படைப்புகளில் காணலாம். சாதாரன மக்கள் புரிந்து கொள்ளும் வகையில் சமுதாயப் பிரச்சனைகளைத் தம் படைப்பின் வாயிலாக கூறியுள்ளார்.“சமுதாயத்தின் விளைபொருளே இலக்கியம். இலக்கியம் சமுதாயத்தையும் சமுதாயம்

இலக்கியத்தையும் ஒன்றையொன்று சார்ந்தே வளர்ந்து வந்துள்ளன. சமுதாயத்தைச் சார்ந்தப் படைப்பாளி, தான் வாழும் இடத்தைச் சுற்றியே தன்னுடைய எண்ணங்களைப் படர விட்டுக் கொண்டிருப்பான். இதனால் சமுதாய அவலங்கள் எளிதில் அவனது மனதைக் கவ்விக்கொள்கின்றன.”1 ஒவ்வொரு நாவலும் ஏதாவது ஒரு பிரச்சனையையோ அல்லது பல பிரச்சனைகளையோ மையமாகக் கொண்டே புனையப்படுகின்றன. சுருங்கச் சொன்னால் சமுதாயக் கருத்துக்களைக் கூறுவதாகவே இவருடைய நாவல்கள் அமைந்துள்ளது. சமூக சிக்கல்களை மையமாக அமைத்து நாவல்கள் படைத்த மலையாள படைப்பாளிகளுள் இன்றியமையாததோர் இடம்பெறுபவர் மாதவிக்குட்டி அவர்கள். இவருடையப் படைப்புக்கள் மலையாள இலக்கிய உலகிற்கு ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தியது எனக்கூறலாம். சாதாரன மக்களின் வாழ்க்கையின் பிரதிபலிப்பாக அமைந்துள்ளது இவர் படைப்புகள். எழுத்துலகில் ஒரு திருப்புமுனை என்று கூறினால் அது மிகையாகாது, சமூகத்தின் அடிமட்டத்தில் வாழ்கின்ற மக்களின் சிக்கல்கள், சமூக அமைப்பில் நிலவி வருகின்ற முரண்பாடுகள், அதன் விளைவாக அவலங்கள், பொருளாதார அடிப்படையில் ஏற்படுகின்ற அவலங்கள், சமூக மதிப்புக்களின் மாற்றம், குடும்ப அமைப்புகளின் சிதைவு, பெண்கள் நெறி பிறழ்தல், பெண்மையை மதிக்காத போக்கு, செல்வந்தர்களின் சுரண்டல், பெண்ணடிமை, ஆணாதிக்கம், தொழிலாளர்களின் நிலை போன்றவை இவருடைய படைப்புகளில் காணலாம். சாதாரன மக்கள் புரிந்து கொள்ளும் வகையில் சமுதாயப் பிரச்சனைகளைத் தம் படைப்பின் வாயிலாக கூறியுள்ளார்.


## Abstract

This research explores the social perspectives depicted in the novels of Madhavikutty (Kamala Surayya). Breaking away from conventional literary norms, her works boldly address shifting social values, marital dynamics, and female autonomy. The analysis examines key thematic elements, including the breakdown of traditional family structures under economic strain and poverty, the true nature of love beyond societal constraints, and the complexities surrounding marriage and gender inequality. Furthermore, the study highlights how male dominance, social hypocrisy, and economic desperation force vulnerable women into exploitation. Through novels like Rukminikkoru Pavakkutty, Roshini, and Aatukattil, Madhavikutty portrays marginalized individuals, particularly women, with deep psychological realism and emotional empathy. Ultimately, her literary creations challenge rigid traditional morals, advocate for women's rights, and present a nuanced understating of human relationships and social justice.



**Keywords:** Rukminikkoru Pavakkutty; Roshini; and Aatukattil; Kamala Surayya

**இக்கட்டுரையை மேற்கோள் காட்ட:** Riya Raja k (2026). சமூகப்பார்வையில் மாதவிக்குட்டி நாவல்கள். *Tamilmanam International Research Journal of Tamil Studies*, *12*(05).



**பதிப்புரிமையும் உரிமமும்:** © 2026 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. https://creativecommons.org/licenses/by/4.0/

“சமுதாயத்தின் விளைபொருளே இலக்கியம். இலக்கியம் சமுதாயத்தையும் சமுதாயம் இலக்கியத்தையும் ஒன்றையொன்று சார்ந்தே வளர்ந்து வந்துள்ளன. சமுதாயத்தைச் சார்ந்தப் படைப்பாளி, தான் வாழும் இடத்தைச் சுற்றியே தன்னுடைய எண்ணங்களைப் படர விட்டுக் கொண்டிருப்பான். இதனால் சமுதாய அவலங்கள் எளிதில் அவனது மனதைக் கவ்விக்கொள்கின்றன.”[1] ஒவ்வொரு நாவலும் ஏதாவது ஒரு பிரச்சனையையோ அல்லது பல பிரச்சனைகளையோ மையமாகக் கொண்டே புனையப்படுகின்றன. சுருங்கச் சொன்னால் சமுதாயக் கருத்துக்களைக் கூறுவதாகவே இவருடைய நாவல்கள் அமைந்துள்ளது. சமூக சிக்கல்களை மையமாக அமைத்து நாவல்கள் படைத்த மலையாள படைப்பாளிகளுள் இன்றியமையாததோர் இடம்பெறுபவர் மாதவிக்குட்டி அவர்கள். இவருடையப் படைப்புக்கள் மலையாள இலக்கிய உலகிற்கு ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தியது எனக்கூறலாம். சாதாரன மக்களின் வாழ்க்கையின் பிரதிபலிப்பாக அமைந்துள்ளது இவர் படைப்புகள். எழுத்துலகில் ஒரு திருப்புமுனை என்று கூறினால் அது மிகையாகாது, சமூகத்தின் அடிமட்டத்தில் வாழ்கின்ற மக்களின் சிக்கல்கள், சமூக அமைப்பில் நிலவி வருகின்ற முரண்பாடுகள், அதன் விளைவாக அவலங்கள், பொருளாதார அடிப்படையில் ஏற்படுகின்ற அவலங்கள், சமூக மதிப்புக்களின் மாற்றம், குடும்ப அமைப்புகளின் சிதைவு, பெண்கள் நெறி பிறழ்தல், பெண்மையை மதிக்காத போக்கு, செல்வந்தர்களின் சுரண்டல், பெண்ணடிமை, ஆணாதிக்கம், தொழிலாளர்களின் நிலை போன்றவை இவருடைய படைப்புகளில் காணலாம். சாதாரன மக்கள் புரிந்து கொள்ளும் வகையில் சமுதாயப் பிரச்சனைகளைத் தம் படைப்பின் வாயிலாக கூறியுள்ளார்.

**சமூக அமைப்புகளின் மாற்றம்:**

இன்றைய சமூகம் பார்த்து வருகின்ற கதைகளில் இருந்து முற்றிலும் மாறுபட்ட தன்மையில் கதைகளைப் படைத்துள்ளார். நடைமுறை வாழ்வில் பின்பற்றப்படாமல் கொள்கையளவினதாக இருக்கின்ற மரபுகளை மீறிச் சமூக மதிப்புக்களின் மாற்றங்களைப் படைத்துக் காட்டும் போக்கு படைப்பாசிரியரிடம் காணப்படுகிறது. இவருடைய படைப்புக்களான ருக்மிணிக்கொரு பாவக்குட்டி, ரோகிணி, சந்தன மரங்கள், மனோமி, கடல்மயூரம், எந்நெந்நும் தாரா, ராத்தியுடெ பதவி வின்யாசம், ஆட்டுகட்டில் ஆகிய நாவல்களில் சமூக மதிப்புகளின் மாற்றங்கள் கூறப்பட்டுள்ளது. வாழ்க்கைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் அளவிற்கு, கற்பிற்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. பாலுணர்வை பற்றி அப்பட்டமாக கூறுவதால் வேறு எழுத்தாளர்களிடமிருந்து வேறுபட்டு காணப்படுகிறார். இவரின் படைப்பில் பாலுணர்விற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. எதற்காக எல்லாவற்றையும் மறைக்க வேண்டும் அனைத்துமே மனிதனுக்கு தேவை தான். அதனால் எனது எழுத்தில் எந்த ஒளிவு மறைவும் இல்லை என்கிறார் ஆசிரியர்.

இம்முறையில் தம் படைப்புகளில் சமூக மதிப்புகளின் மாற்றங்கள் படைத்துக் காட்டுகின்றார்.

**குடும்ப அமைப்புகள் சிதைதல்:**

சுயநலம், பண ஆசை, அறியாமை, செல்வர்களின் சுரண்டல் அதனால் சமூகத்தின் அடிமட்டத்து ஏழை மக்களின் இல்லற வாழ்க்கை சிதைகின்ற அவலம், குடும்பங்களின் பொறுப்புக்கள் தட்டிக் கழிக்கப்படும் பொழுது ஏற்படக்கூடிய சபலங்கள், விரக்த்தி, தடுமாறும் போக்கு ஆகியவற்றை உள்ளதுள்ளவாறே எடுத்துரைக்கிறார் ஆசிரியர். “சமுதாயம் முற்றிலும் வளர்ச்சியடையக் குடும்பம் ஒரு அடிப்படையாக உள்ளது. குடும்பம் சமுதாயத்தின் அடித்தளமாகக் கருதப்படுகிறது.”[2] இவருடைய அனைத்து நாவல்களிலும் குடும்பங்கள் சிதைவதைக் குறிப்பிட்டுள்ளார். ருக்மிணிக்கொரு பாவக்குட்டி நாவலில் வறுமையின் காரணமாகக் குழந்தைகள் விபச்சார விடுதியில் கொண்டு விடுகின்றனர். பெண் குழந்தைகள் என்றாலே, கருவிலே அழித்துவிடும் நம் நாட்டில் குழந்தையை வளர்க்க முடியாமல் இவ்வாறு செய்கின்றனர். விபச்சாரர்கள் உருவாவதற்கு இதுவே ஒரு காரணம் என்கிறார் ஆசிரியர். ஒவ்வொரு கதையிலும் வெவ்வேறு விதமான கதாபாத்திரங்களை படைத்துள்ளார். தான் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என நினைத்து தனது கணவன் மற்றும் மகன் இருவரையும் கவனிக்காமல் விட்டுவிடுகிறார். மகனின் நடவடிக்கைகள் சரியில்லாமல் குடும்பம் சிதைகிறது. இருபது ஆண்டுகளாகியும் குழந்தைகள் இல்லை அதுவும் அல்லாமல் அவளுடைய படுக்கை அறைக்கு அவளின் பழையக் காதலனை அனுப்புகிறான் கணவன். அதனால் அவர்களின் குடும்ப வாழ்க்கை சிதைகிறது. தன் காதலனை விட்டு வேறொருவரைத் திருமணம் செய்தவள், கணவன் இறந்த பிறகுப்பழையக் காதலனிடம் சேர்ந்து வாழ்வதற்காக வருகிறாள். இதனால் அவளுடையக் குடும்பம் சிதைகிறது. தனது சுயநலத்திற்காகத் தன் மனைவியின் உடலில் இயந்திரத்தைப் பொருத்தி ஆராய்ச்சி செய்கிறான் அதனால் அவர்களின் குடும்பம் சிதைகிறது. தன் தந்தை இறந்தப் பிறகு அனாதையாகிறாள் அவ்வாறாகவும் குடும்பங்கள் சிதைகின்றன என ஆசிரியர் தனது நாவல்களில் காட்டியுள்ளார்.

**காதல்:**

காதல் என்பது ஆணும் பெண்ணும் இருவரும் மனப்பூர்வமாகப் பரஸ்பரம் விரும்புவதாகும். ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் காதலிருக்கிறது. பலதரப்பட்ட காதலைத் தம் படைப்புகள் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளார். ஆண் பெண் உறவின் அடிப்படை உணர்வு காதல் பழங்கால இலக்கியத்தில் தலைமகனுக்கு நிகராக காதலைப் பற்றி கூறும் பொழுது பெண்கள் (தலைவிகள்) பேசுவதாகக் காணப்படவில்லை. இது அக்கால இலக்கண மரபு. இவ்விலக்கண மரபை மீறித்தம் படைப்புக்களில் பெண்களை ஆண்களுக்கு இணையாகப் பேசவைத்துள்ளார்

மாதவிக்குட்டி. சாதிமத பேதமற்ற சமுதாயம் உருவாக வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு அடிமட்டத்து மக்களின் காதல் நிலையையும் விளக்கியுள்ளார். இவர் படைப்புக்களில் காதல் உணர்வு அதிகமாக காட்டப்படுகிறது. இளமையில் காதலிப்பது என்பது இயற்கை, ஆனால் முதுமைக்காதலையும் கூறியுள்ளார். உடல் அழகுக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுக்காது உள்ளக் காதலுக்கும் முக்கியத்துவம் கொடுத்துள்ளார். சில நாவல்களில் காதல் தொடர்பான சிக்கல்களை கருவாகக் கொண்டு படைக்கப்பட்டுள்ளது. நாவலின் மையக் கருத்தாகச் சமுதாய சிக்கல்கள் சித்தரிக்கப்படுகின்றன. நாவல்களிலும் காதல் சித்தரிப்பு இடம் பெற்றுள்ளது மற்றும் இருவர் மனம் கொண்ட காதல், ஒரு தலைக் காதல், காதல் நிறைவேறுதல், காதல் நிறைவேறாமை போன்றவைகள் இவருடையப் படைப்புக்களில் கூடுதலாகக் காணமுடிகிறது.

மாதவிக்குட்டியின் நாவல்களில் இடம்பெற்றுள்ள காதல் சித்தரிப்புக்களைக் காணும்போது காதல் தோன்றுவதற்குப் பொருளாதார அடிப்படையிலான சமநிலையும் அதன் விளைவாக சில உணர்வு நிலைகளும் காரணமாகக் காணப்படுகிறது. மேலும் ஒத்த சிந்தனைப் போக்கின் காரணமாகவும், ஒருவர் மற்றவர் மீது கொண்ட அனுதாப உணர்வின் காரணமாகவும், ஒருவித ஈர்ப்பினாலும் காதல் தோன்றுவதைக் காட்டியுள்ளார்.

**திருமணம்:**

“வாழ்க்கை நிலை என்பது பொருளாதார அமைப்பினாலும் அவ்வமைப்பு தோற்றுவிக்கும் உற்பத்தி உறவுகளினாலும் அவ்வுற்பத்தி உறவு முறைக்கு இணையான சமூக உறவுகளினாலும் தீர்மானிக்கப்படுவதாகும். இவற்றில் மாற்றம் ஏற்படுகின்ற பொழுது சமுதாயத்திலும் மாற்றங்கள் நிகழ்கின்றன.”[3] ஓர் ஆணும் பெண்ணும் திருமணத்தின் மூலம் கணவன் மனைவியாவதனால் குடும்பம் தோன்றுகிறது. அவர்கள் தாமே திருமண ஏற்பாட்டின் மூலம் குடும்பம் ஆதலும் பெற்றோர்கள் நிச்சயித்த வண்ணம் இந்த ஏற்பாட்டிற்கு உடன்பட்டுக் குடும்பம் ஆதலும் உண்டு. “திருமணம் என்பது வேலிபோல் என்னும் மனப்பான்மை வந்துவிடுகிறது பெண்களுக்கு இப்போது கிராமத்துப் பெண் அடக்கமாக இருக்கும் என்ற நம்பிக்கை, ஆதலால் கிராமத்துப் பெண்ணை மகனுக்குத் திருமணம் செய்து வைப்பது நகரத்தில் இருக்கும் பெண் நல்லவள் இல்லை என்ற மனநிலை நம் சமுதாயத்தில் இருக்கிறது: மாமியாரை மதிக்காது என்ற மனநிலையும் சமுதாயத்தில் நிலவுகிறது.”[4] திருமணம் என்னும் சடங்கு இல்லற வாழ்க்கையை உருவாக்குகின்ற அமைப்பாகத் திகழ்கின்றன. திருமணச் சடங்கின் மூலம் ஆணும் பெண்ணும் இணைந்து மனமொத்து வாழும் வாழ்க்கை சமுதாயத்தில் நிலவி வருகின்ற இன்றியமையாத பண்பாட்டுக் கூறவும். ஆயின் இத்தகைய திருமணச் சடங்கின்றி, ஆணும் பெண்ணும் இணைந்து வாழும் இல்லற வாழ்க்கை நடத்துவதும்; பெரும்பாலும்

திருமண வாழ்க்கை பிரிவில் முடிகிறது; சில குடும்ப வாழ்க்கை சேர்ந்து வாழ்வதாகவும்; இரண்டாம் திருமணம் செய்வதாகவும் ஆசிரியர் தம் நாவல்களில் படைத்துள்ளார்.

**பால் வேறுபாடு:**

“பாலியல் உணர்வு வாழ்வின் அடிமட்டத்தில் படிந்துள்ள பாலியலை எப்படி புரிந்து கொள்வது என்பதை நாம் தெரிந்து கொள்ளாத வரை நாம் ஒருபோதும் வாழ்க்கையை மதித்துப் போற்றக் கற்றுக் கொள்ளப் போவதில்லை என்கிறார் பாலியல்துறை அறிஞர் டேவிட் எல்லீஸ்.”[5] பாலுணர்வு என்பது ஒரு கல்வியாகப்பிற சமூகங்களில் உருவாகி வருகின்ற போது இன்றைய சமுதாயத்தில் இது மறைக்கப்பட வேண்டிய ஒரு உணர்வாகக் கருதப்பட்டு வருவதால் தான் இங்கு இளைஞர்கள் பாலுணர்வு பற்றிய தெளிவான அறிவின்றி வளர்க்கப்படுகின்றனர். இலக்கியத்தில் பாலுணர்வு ஒரு கருப்பொருளாகக் காட்டப்பட வேண்டின், உடலுறவிற்கு அப்பாற்பட்ட ஒன்றாகவும் அது காட்டப்பட வேண்டும். ஆண், பெண் இருவரின் முழுமையான இயற்கையினையும் அது காட்ட வேண்டும், ஆயின் இக்காலத்தில் தோன்றிய பாலுணர்வு வாழ்வின் உடலுறவு மட்டுமே பேசுவதாக அமைந்தன. மாதவிக்குட்டியின் நாவல்களில் ஆண், பெண் இவர்களின் உடலுறுப்புக்கள் மற்றும் உடலுறவானது ஆபாசமாக விளக்கப்படும் வர்ணனைகள் பல இடங்களில் உள்ளன. பாலுறவு அல்லது பால் ஈடுபாடு என்பது ஆணையம் பெண்ணையும் உடல்வழி இணைக்கும் பாலமாகும். சமுதாயத்தில் பாலுணர்வுப்போக்கு மக்களின் பொருளாதார நிலையைப் புலப்படுத்துமாறு சிலசமயம் அமையும். பொருளாதாரத் தாழ்வானது விபச்சாரத்தை மேற்கொள்ளச் செய்கின்றது என்பது இவரின் நாவலின் வழிப் புலப்படுகிறது. பாலுணர்வை இலக்கியக் கருப்பொருளாகத் தேர்ந்தெடுத்துள்ளார்; அதுவுமல்லாமல் பாலுணர்வு நாவலின் இடையிடையே கூறப்பட்டுள்ளது.

சமுதாயத்தில் பாலுணர்வு பெறுமிடத்தைத் தமது படைப்புகள் வாயிலாக வெளிப்படுத்தி உள்ளார். பாலுணர்வுப் பற்றியத் தெளிவான கண்ணோட்டம் இன்மையினால் மனிதர்கள் பாதிக்கப்படுவதைக் காட்டுகிறார். விபச்சார விடுதியில் உள்ளவர்கள் எவரும் விரும்பி இத்தொழிலுக்கு வருவதில்லை. சூழ்நிலை மற்றும் வறுமையின் காரணமாக இதில் ஈடுபடுகின்றனர். இன்றுள்ள சமூக மாற்றத்தில் முறையான வாழ்க்கைக்குறிய வாய்ப்புக்களை இழந்தவர்களாகவும் ஏழை மக்களைப் படைத்துள்ளார். அழகானப் பெண்களைப் பார்க்கும் பொழுது ஒரு சில ஆண்களின் மனதில் ஏற்படும் உணர்வுகளை வெளிக்காட்டியுள்ளார். தனது உடலைக்கூட வேறொருவரிடம் காட்ட விரும்பாதவர்களையும் தன் நாவலில் படைத்துள்ளார்.

**நெறிபிறழ்ந்தப் பெண்கள்:**

மனித சமுதாயத்தின் வரலாற்றை ஆண், பெண் உறவு முறைகளில் ஏற்பட்ட மாற்றங்களின் வரலாறாக எழுதிக்கொள்ள முடியும். மனித வாழ்க்கையில் பல்வேறு மாற்றங்களை ஒருத்திக்கு ஒருவன் என்ற உறவு முறை விளைவித்தது. அறநூல்களுள் ஒன்றாகியத் திருக்குறளில் திருவள்ளுவர் கற்பை;

**“பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்**

**திண்மை உண்டாகப் பெறின்.”[6] (குறள்-54)**

எனப்பாடியுள்ளார் குறட்பாவில் கற்பு என்பதற்குத் திண்மை என்று பொருள் கூறுகின்றார். ருக்மிணிக்கொரு பாவக்குட்டி நாவலில் வறுமையின் காரணமாக ராதா, மீரா, சரஸ்வதி ஆகியோர்கள் விலை மகளிராக மாறுவதைக் காட்டுகிறார். ருக்மிணியின் தாய் அவளை பரத்தமைத் தொழிலுக்கு சிறுவயதிலேயே விடுகிறாள். பாலுணர்வு பற்றி அறியாத சீதா என்னும் சிறுமியும் விபச்சாரவிடுதியில் உள்ளாள். சமூகத்தினரால் ஒதுக்கி வைக்கப்பட்ட பிரிவினரான விலைமகளிரையும் தம் நாவலில் கதை மாந்தர்களாகப் படைத்துள்ளார். மனித உணர்வுக்கு முதலிடம் கொடுத்துக் கதை எழுதுவதில் முன் நிற்கின்றார் மாதவிக்குட்டி. பெண்ணின் மனநிலையைப் புரிந்து கொள்ளாமல் ஆண்கள் நடந்து கொள்ளும் முறை காட்டப்படுகிறது. தனிமனித உணர்வுகளுக்கும், உண்மைகளுக்கும் இவருடைய படைப்புக்களுக்கும் மிக நெருக்கமான தொடர்புண்டு. பெண்கள் தனித்துச் சுதந்திரமாக வாழ இயலாதச் சமூகச் சூழல்கள் காட்டப்பட்டுள்ளது.

**ஆணாதிக்க நிலை:**

ஆண்கள், பெண்களையும் அவர்களது உணர்ச்சிகளையும் மதிக்கத் தவறுவதையும் தங்கள் சுயநலத்திற்காக அவர்களை இன்பநுகர் பொருளாக மட்டும் பயன்படுத்திக் கொள்ளும் பான்மையினையும் படைத்துக்காட்டுகிறார். விபச்சார விடுதிக்கு வாடிக்கையாளராக வரும் ஒரு கல்லூரி மாணவன் விடுதியில் உள்ள தாசியைக் காதலிக்கிறான் அவளை அவன் வீட்டிற்கு அழைத்துச் செல்கிறான் சில நாட்கள் கழிந்த பிறகு அவளைத் திருமணம் செய்யாமல் விட்டுவிடுகிறான். இதனை ஆசிரியர் “ஈச்சையைப் பிடிக்கான் நாக்கும் நீட்டி கிடக்குந்ந சீங்கண்ணியைப்போல”[7] என்று கூறுகிறார். இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு பதினைந்து வயதான சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்கிறான். அவள் கருவுற்றபொழுது அவளுடைய பெற்றோர்களுக்குப் பயந்து திருமணம் செய்யாமல் போய்விடுகின்றார். தங்களுக்குக் குழந்தைகள் இல்லை என்பதற்காக நண்பனிடம் பணம் கொடுத்து அவளை அனுபவிப்பதற்காக அனுப்பி வைக்கிறான். தனது ஆராய்ச்சிக்காகத் தன் மனைவியின் உடலில் இயந்திரத்தை பொருத்தி ஆராய்ச்சி செய்துள்ளான். மனோமி என்ற நாவலில் மனோமியின் தந்தை இறந்தப்பிறகு தன் தந்தையின் நண்பராகிய அண்ணாதுரையின் வீட்டிற்கு வருகிறாள் அங்கு அவருடைய மகன்கள் இருவரும்

அவளிடம் தவறாக நடக்க முற்படுகின்றனர். மேலும் இவருடைய நாவலில் கூறப்படுகின்ற ஆணாதிக்கத் தன்மை முழுவதும் பாலுணர்வினால் ஏற்படுவதாகும்.

**பெண்களின் நிலை:**

இந்தியச் சமூகத்தில் பெண்களின் நிலையை ஆராய்ந்தால் பெண்கள் பிறப்பு முதல் இறப்பு வரையிலும் பல்வேறு விதமான சமூகக் கொடுமைகளுக்கு ஆளாகியிருக்கின்றனர். பெண் எழுத்தாளர்கள் மட்டுமல்ல மனித உரிமை கோரும் அனைத்து அமைப்புக்களிலும் பெண்கள் மேம்பாட்டிற்கான கருத்தாக்கங்கள் பேசப்பட்டன. ஒரு இயக்கம் உருவாக வேண்டுமானால், அடிப்படையாகக் கோட்பாடுகளைக் கொண்டிருக்க வேண்டும். பெண் விடுதலை, ஆண்களுக்கு நிகரான சமவுரிமை, சம வாய்ப்பு, சம ஊதியம் இவற்றைப் பெறுதல், ஆணாதிக்க நிலையை எதிர்த்தல் போன்றவற்றை பெண் சமூகம் விரும்பினர். கற்பு என்பது பால்வகை அடிப்படையில் பெண்களுக்கென்று வகுக்கப்பட்ட பண்பாடு அடிப்படையிலான கட்டுப்பாடாகும். இவ்வாழ்வில் தோல்வியடைந்த பெண், ஆணுடன் திருமணம் புரிந்து கொள்ளாமல் இணைந்து வாழும்போது சமுதாயம் மற்றும் குடும்பத்தினரின் தூற்றுதலுக்கு உள்ளாவதற்குக் காரணம் அவள் இந்தக் கட்டத்தில் இருந்து பிறழ்ந்துவிட்டாள் என்று நினைப்பதேயாகும். இதனை ஏற்காத மாதவிக்குட்டி தம் படைப்புக்களில் கற்பிற்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை; பாலுறவு என்பது நாம் உருவாக்கியதே அது அனைத்து உயிர்களுக்கும் உரியது என்கிறார். இவருடையப் படைப்புக்களில் பெண்களின் நிலைகளை அனைத்து நாவல்களிலும் காட்டியுள்ளார்.

சமுதாயத்தில் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளவர்கள் விலைமகளிர். வெறுப்பாக இவர்களைப் பார்க்கும் நிலையைக் காணமுடிகிறது. இவர்களை இச்சமூகமே உருவாக்கியுள்ளது என்பதை நாம் மறுக்கவோ, மறக்கவோ முடியாது. குழந்தையாக இருக்கும் ருக்மிணியை அவளது பெற்றோர்களே விபச்சாரவிடுதியில் கொண்டு விடுகின்றனர். பெண்ணுக்கு பெண்ணே பகையாக இருக்கும் நிலைக் கூறப்பட்டுள்ளது. தவறு செய்வது ஆணாக இருந்தால் பெரிதாகப்படுவதில்லை, அதையே பெண் செய்தால் குற்றமாகக் கருதப்படும் நிலை காணப்படுகிறது. இந்நாவலில் சிலர் முறையானக் குடும்ப வாழ்க்கை வாழ விரும்புபவர்களாகவும், ஏங்குபவர்களாகவும் படைக்கப்பட்டுள்ளார்கள். விபச்சாரத் தொழில் மோசமானது என்று எண்ணி சன்னியாசம் போக நினைப்போரும் உண்டு; விலைமகளிர் ஆவதற்கு வறுமையும் ஒரு காரணம் என்கிறார் ஆசிரியர்.

**துறவு**:

துறவு என்ற சமூக மதிப்புப் பற்றியப்புதிய பார்வையைத் தம் படைப்பில் காட்டுகிறார். ‘எல்லாவற்றையும் வெறுத்து பற்றற்று வாழ்வதே துறவு’ என்ற கருத்தினை மாற்றி ருக்மிணிக்கொரு பாவக்குட்டி நாவலில் படைத்துக் காட்டுகிறார்

ஆசிரியர். இந்நாவலில் லட்சுமிபாயின் படைப்பு இம்முறையில் அமைகின்றது. விபச்சாரவிடுதி நடத்தும் இவர், பல இன்னல்களுக்கும் ஆளாகிறார். இறுதியில் எல்லாவற்றையும் விட்டுவிட்டு காசிக்குப் போக முடிவு செய்கிறார். தான் செய்யும் தொழில் மோசமானது என்று உணர்ந்தப்பிறகு இம்முடிவிற்கு வருவதாகப் படைப்பாசிரியர் காட்டியுள்ளார்.

மாதவிக்குட்டியின் நாவல்களில் காணப்படும் சமுதாயச் சித்தரிப்பினை நோக்கும்போது சமுதாயம் பற்றிய அவருடைய கருத்துக்களை அறிய முடிகிறது. சமுதாயத்தில் வறுமையினால் பெண்கள் நெறிபிறழ்ந்து பரத்தையராக மாறுகின்றனர் என்பதையும், நெறிமுறைகள் பிறழாத வாழ்க்கை வாழ வேண்டும் என்று விரும்புகின்ற விலைமகளிரும் விதவையரும் சமூகச் சூழல்களினால் அங்ஙனம் வாழ இயலாமல் போகின்றது என்பதையும் படைப்புகளில் காணமுடிகிறது. இன்றையச் சமூக அமைப்பில் பெண்களின் நிலையைப் பற்றியக் கருத்துக்கள் இவருடைய நாவல்களில் வெளிப்படுகின்றன. பெண்கள் தனித்து சுதந்திரமான வாழ்க்கை வாழ இயலாத சமூகச் சூழல்களையும் காட்டியுள்ளார். இவர்கள் உணவிற்கும் உடைக்கும் ஆடவரைச் சார்ந்தே நிற்கின்ற நிலையையும், சமூகக் கட்டுப்பாடுகளின் ஆளுகைக்கு பெண்கள் ஆளாகின்ற சூழல்களையும், சமூக அமைப்பில் பெண்மை மதிக்கப்படாமையையும், போகப் பொருளாக கருதுவதையும் தம்முடைய நாவல்களில் படைத்துள்ளார். வரதட்சனைக் கொடுமை மற்றும் செல்வந்தர்கள் ஏழை மக்களின் உழைப்பினைச் சுரண்டும் நிலை இவருடையப் படைப்பில் இல்லை. சமூக அமைப்பின் மாற்றத்தையொட்டிச் சமூகத்தில் காலங்காலமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்த சமூக மதிப்புகள் இன்றையச் சமூகத்தில் நிகழ்கின்ற அவலங்களுக்குத் தீர்வுகாணும் போக்கில் சமுதாய விமர்சனக் கண்ணோட்டம் இவரதுப் படைப்புகள் வாயிலாக வெளிப்படுகிறது.

**துணைநூற் பட்டியல்:**


1.கைலாசபதி.க தமிழ் நாவல் இலக்கியம்,

திறனாய்வு கட்டுரைகள்,

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்,

சென்னை- 600098.

நான்காம் பதிப்பு- ஆகஸ்ட்-1987.

2.கேசவ் தேவ்.பி நாவல் என்ற காழ்ச்சப்பாட்டில்,

பிரபாத் புக் ஹவுஸ்,

திருவனந்தபுரம்.

முதற்பதிப்பு- மார்ச்- 1992.

3.சந்திரசேகரன்.ரா தமிழ் இலக்கிய வாழ்வியல்,

பாரதியார் நூலரங்கம்,

7 ஆர். கே. நகர், கோயம்புத்தூர்.

முதற்பதிப்பு- டிசம்பர்-2004.

4.தாயம்மாள் அரவாணன் பெருமையே வெண்மையாய்,

அனைத்துலக மகளிர் ஆண்டு வெளியீடு,

புதுச்சேரி-2001.

5.மாதவிக்குட்டி மாதவிக்குட்டியுடெ க்ருதிகள் சம்பூர்ணம்,

தொகுதி 1,2, டி சி புக்ஸ்,

கோட்டையம். முதற்பதிப்பு-2009.

6.முத்து சிதம்பரம் பெண்ணியம் தோற்றமும் வளர்ச்சியும்,

தமிழ் புத்தகாலயம்,

தி நகர், சென்னை. 600017.

நான்காம் பதிப்பு- ஜூலை-2003.

7.முருகன்.பா திருக்குறள்,

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்,

சென்னை. 600098.

எட்டாம் பதிப்பு-ஜனவரி-2001.

## துணைநூற் பட்டியல்

[1] டாக்டர். எஸ்.ஸ்ரீகுமார், நாவலும் சமுதாயமும். பக்-17

[2] சோ.தனலட்சுமி, திலகவதியின் குறுநாவல்கள், ஒரு பெண்ணியப் பார்வை. பக்-73

[3] டாக்டர்.எஸ்.ஸ்ரீகுமார், நாவலும் சமுதாயமும். பக்-73

[4] தாயம்மாள் அறவாணன், பெருமையே பெண்மையாய். பக்-35

[5] Havelock Ellis, Studies in the psychology of sex, vol-1, preface, p-xxx

[6] பேராசிரியர். பா.முருகன், திருக்குறள் திறவுகோல். பக்-13

[7] மாதவிக்குட்டியுடெ க்ருதிகள் சம்பூர்ணம், ருக்மிணிக்கொரு பாவக்குட்டி. பக்-31

[8] மேலது, பக்- 209